## 'அ' பிரிவு

### A1 பிழைத்திருத்தம்

**பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது. (10 மதிப்பெண்கள்)**

சிங்கப்பூரில் எங்குப் பார்த்தாலும் உயர்ந்த கட்டடங்கள் கட்டப்பட்டு வருவதை நாம் கவனிக்கலாம். இவற்றில் சில கடைத்தொகுதிகள், பேரங்காடிகள், (Q1)அளுவலகங்கள், அடுக்குமாடி வீடுகள் முதலியன ஆகும். மக்கள் தொகை பெருகி வருவதால் நம் அரசு (Q2)அதிகமாகக் குடியிருப்புப் பேட்டைகளைக் கட்டி வருகிறது. அக்குடியிருப்புப் பேட்டைகளின் அருகில் நம் அரசு புதிய தொழிற்சாலைகளுக்கு (Q3)உருவாக்கியுள்ளன. எனவே, சிங்கப்பூரில் கட்டுமானத் தொழில் ஒரு முக்கியத் தொழிலாக உள்ளது. கட்டுமானத் தொழிலில் ஆயிரக்கணக்கானோர் (Q4)ஈடுபட்ட உள்ளனர். அவர்களுக்கு நல்ல ஊதியமும் (Q5)வழங்கப்படுகிறார்கள். எனினும் சிங்கப்பூரர்கள் பலர் இத்தொழிலை விரும்புவதில்லை. ஆகவே, அண்டை நாடுகளிலிருந்து கட்டட வேலைக்குத் தேவைப்படும் தொழிலாளர்களைத் தருவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |

MORE PAPERS AVAILABLE AT WWW.TESTPAPERSFREE.COM

A2 வாக்கியங்களை முடித்தெழுதுதல்

பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொல்லைக் கொண்டு அல்லது சொற்களைக் கொண்டு முடித்துக் காட்டு. அவ்வாறு முடிக்கப் பெறும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அதற்கு முந்திய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும். ( 8 மதிப்பெண்கள்)

Q6 நம் பிரதமர் மற்ற நாடுகளுடன் அணுக்கமான உறவை வளர்க்கப் பல வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார்.

நமது பிரதமர் வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொண்டதன் மூலம்

மற்ற நாடுகளுடன்______________________________________________

______________________________________________________________

Q7 மக்கள் கோமாளியின் வேடிக்கையான செயல்களைக் கண்டு வயிறு குலுங்கச் சிரித்தனர்.

கோமாளியின் வேடிக்கையான செயல்கள்____________________________

______________________________________________________________

Q8 சிங்கப்பூர் அரசாங்கம் கலைகளை வளர்ப்பதற்காகப் பெருந்தொகையைச் செலவு செய்கிறது.

சிங்கப்பூர் அரசாங்கம் பெருந்தொகையைச் செலவு செய்யக்

காரணம்________________________________________________________

______________________________________________________________

Q9 மக்களின் நலனைக் கொண்டு நம் அரசாங்கம் பல இயக்கங்களை ஏற்பாடு செய்துள்ளது.

மக்களின் நலனுக்காக நம் அரசாங்கத்தால்__________________________

______________________________________________________________

A3 வேற்றுமை உருபுகள்

**Q10 முதல் Q13 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (8 மதிப்பெண்கள்)**

பாரி கடையேழு வள்ளல்களில் ஒருவர். ஒருநாள் பாரி வள்ளல் தன் (Q10)________________ (நாடு) சுற்றிப் பார்க்க விரும்பினான். அவன் தன்னுடைய தேரில் பயணம் செய்தான். அவன் சென்ற (Q11)________________ (பாதை) முல்லைக்கொடி ஒன்று தனியாக வளர்ந்து இருந்ததைக் கண்ணுற்றான். அது பற்றிப் படரக் கொடி இல்லாததால் வாடிய நிலையில் அசைந்து கொண்டிருந்தது. (Q12)________________ (அக்கொடி) நிகழ்ந்த துன்பத்தைக் கண்டு பாரியின் உள்ளம் நெகிழ்ந்தது. அவன் அந்த முல்லைக் கொடியின் துயரைப் போக்க முடிவெடுத்தான். பாரி (Q13)________________ (தன்) அழகிய தேரை முல்லைக்கொடியின் அருகில் செலுத்தினான். பின், கொடியைத் தூக்கித் தேர் மீது படரவிட்டான். அவ்வாறு செய்த பிறகு அவனுக்கு மனநிறைவு உண்டானது.

## 'ஆ' பிரிவு

### B4 முன்னுணர்வுக் கருத்தறிதல்

**பின்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது. (8 மதிப்பெண்கள்)**

பள்ளி விடுமுறை தொடங்கியது. ரகு, குமார், ஜஸ்டின் ஆகிய மூவரும் முகாமிற்குச் செல்லத் தயாராயினர். அவர்கள் நான்கு நாட்கள் முகாமில் தங்குவதற்கு முடிவு செய்திருந்தனர். Q14________________. அவர்கள் மூவரும் மிகவும் உற்சாகமாகப் புறப்பட்டனர். அவர்கள் ஒரு சிறிய தீவை வந்து அடைந்தனர். Q15________________. அவர்கள் தங்களுக்கு ஏற்ற ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தனர். Q16________________. அங்கே அவர்களைப் போலவே சற்றுத் தொலைவில் பலரும் கூடாரம் அமைத்துத் தங்கியிருப்பதைப் பார்த்து மகிழ்ந்தார்கள். நண்பகலில் அவர்களுக்குப் பசி எடுத்தது. Q17________________. உணவு சூடாக இல்லாவிட்டாலும் சுவையாக இருந்தது. அதன் பின்னர், அவர்கள் தீவைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார்கள். அது அவர்களுக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது.

(1) அவ்விடத்தில் ஒரு கூடாரத்தை அமைத்தனர்.

(2) அவர்கள் வீட்டில் உள்ள அனைத்துப் பொருட்களையும் எடுத்துக் கொண்டனர்.

(3) அவ்விடம் தங்களுக்கு ஏற்றதா என்று அவர்கள் சிந்தித்தனர்.

(4) அத்தீவில் நிறைய கட்டடங்கள் இருந்தன.

(5) அவர்கள் கொண்டுவந்திருந்த உணவை உண்டனர்.

(6) அவர்கள் உணவைச் சமைத்து உண்டார்கள்.

(7) அவர்கள் தேவையான பொருட்களை எல்லாம் எடுத்துக் கொண்டனர்.

(8) அத்தீவு ஒரு காட்டுப் பகுதிப் போல் தோன்றியது.

| வினா எண் | விடை |
| --- | --- |
| (Q14) | |
| (Q15) | |
| (Q16) | |
| (Q17) | |

**C5 சுயவிடைக் கருத்தறிதல்**

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.**

**Q18 முதல் Q23 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (26 மதிப்பெண்கள்)**

ரவியின் பெரியப்பா இரண்டு வாரக் கால மருத்துவ விடுப்பில் இருந்தார். அவரைக் காண ரவி தன் குடும்பத்தினரோடு சென்றான். ரவியின் தந்தை தன் சகோதரரிடம் அவரது உடல் நலக் குறைவைப் பற்றி விசாரித்தார்.

அப்போது ரவியின் பெரியப்பா, "ஒருநாள் நான் வேலைக்கு அவசர அவசரமாக நடந்து சென்றேன். அப்போது திடீரென்று மார்பில் இடப்புறம் வலி ஏற்பட்டது. அதோடு மூச்சு விடுவதிலும் சிரமம் ஏற்பட்டது. இலேசாக நெஞ்சு எரிச்சலும் இருந்தது. அதனால், என் நடை தளர்ந்தது. என்னால் தொடர்ந்து நடக்க இயலவில்லை. சிறிது நேரத்திற்குள் என் உடல் முழுவதும் வியர்க்கத் தொடங்கியது. எனக்குப் பயமும் நடுக்கமும் ஏற்பட்டன. நான் கணப் பொழுதும் தாமதிக்காமல் மருத்துவமனையை அடைந்தேன்," என்று கூறினார்.

"மருத்துவர் என் நாடித்துடிப்பைப் பார்த்தபின், இரத்த அழுத்தத்தைச் சோதித்தார். அதன் பின், மருத்துவர் என்னை மார்பு 'எக்ஸ்-ரே' படம் எடுக்கச் சொன்னார்," என்று பெரியப்பா கூறினார். உடனே ரவி, "எதற்காக மருத்துவர் 'எக்ஸ்-ரே' எடுக்கச் சொன்னார்?" என்று கேட்டான். எக்ஸ்ரே என்பது மின்சாரக் காந்தக் கருவியாகும் என்று அவர் கூறினார். இதிலிருந்து வரும் கதிர்கள் பொருள்களை ஊடுருவிச் செல்லக் கூடிய தன்மை வாய்ந்தவை. அவை உடலில் உள்ளுறுப்புகளில் உண்டாகும் குறைப்பாடுகள், எலும்புகளின் முறிவு ஆகியவற்றைக் கண்டறிய உதவுகின்றன. மார்பு எக்ஸ்-ரே மூலம் காச நோய், இருதயத்தில் ஏற்படும் துவாரம், புற்றுநோய் போன்ற நோய்கள் கண்டறியப்படுகின்றன. அதனாலேயே மருத்துவர் தன்னை எக்ஸ்-ரே படம் எடுக்க அனுப்பி வைத்ததாக விளக்கிக் கூறினார்.

அவருக்கு எடுக்கப்பட்ட எக்ஸ்-ரே படம் ஓர் உறையில் வைத்துக் கொடுக்கப்பட்டதாகக் கூறினார். பின்னர், தாதியர்கள் அவரை ஓர் இயந்திரப் பலகையில் ஏறி நின்று ஓடச் செய்து அவரின் இருதயத் துடிப்பைக் கணக்கிட்டனர். மருத்துவர் அவரைத் தொடர்ந்து இரத்தப் பரிசோதனை செய்தார். அங்குள்ள தாதி ஒருவர் சிறிது இரத்தத்தை எடுத்துச் சோதித்ததுடன் ஒரு தாளில் குறிப்பு எழுதிக் கொடுத்தார். அதன் பின் அவர் மீண்டும் மருத்துவரின் அறைக்கு அனுப்பப்பட்டார். மருத்துவர் அவரை ஓய்வு எடுக்கச் சொல்லி இரண்டு வாரக் கால விடுப்புக் கொடுத்தார்.

இன்றைய நவீன உலகில் நமக்குள்ள நவீன மருத்துவச் சாதனங்களின் வளர்ச்சியைக் கண்டு ஆச்சரியமும் மகிழ்வும் <u>எய்துவதாகப்</u> பெரியப்பா கூறினார். இச்சாதனங்களைக் கொண்டு பல உயிர்களைக் காப்பாற்ற முடியும் என்பதையும் உணர்ந்தார்.

<u>கேள்விகள் :</u>

(Q18) ரவியின் குடும்பத்தினர் ஏன் அவனது பெரியப்பாவைக் காணச் சென்றனர்? (4 மதிப்பெண்கள்)

______________________________

______________________________

______________________________

______________________________

(Q19) ரவியின் பெரியப்பாவுக்கு நடுக்கமும் பயமும் ஏற்படக் காரணம் என்ன? (4 மதிப்பெண்கள்)

______________________________

______________________________

______________________________

______________________________

(Q20) ‘எக்ஸ்-ரே’ கதிர்களின் ஆற்றல் என்ன? (4 மதிப்பெண்கள்)

(Q21) மருத்துவர் ரவியின் பெரியப்பாவின் இரத்த அழுத்தத்தை எப்போது சோதித்தார்? (3 மதிப்பெண்கள் )

(Q22) மருத்துவ வளர்ச்சி மக்களுக்கு எவ்வாறு பயன்படுகிறது? (4 மதிப்பெண்கள்)

(Q23) ரவியின் பெரியப்பா உடனே மருத்துவரைக் காணச் சென்று இருக்காவிட்டால் என்ன நேர்ந்திருக்கும் என்று நீ நினைக்கிறாய்? (4 மதிப்பெண்கள்)

**Q24** <u>பொருள் எழுது</u> (4 மதிப்பெண்கள்)

அ. தளர்ந்தது - ______________________________

ஆ. எய்துவதாக - ______________________________

◈◈◈◈◈ முற்றும் ◈◈◈◈◈

**P6 HMT**
**TESTPAPER 3**

**ANSWER KEY**

## A1 பிழை திருத்தம்

1. அலுவலகங்கள்
2. அதிகமான
3. உருவாக்கியுள்ளது
4. ஈடுபட்டு
5. வழங்கப்படுகிறது

## A2 வாக்கியங்களை முடித்தெழுதுதல்

6. அணுக்கமான உறவை வளர்த்துள்ளார்.
7. மக்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்தன.
8. கலைகளை வளர்ப்பதற்கே ஆகும்.
9. பல இயக்கங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

## A3 வேற்றுமை உருபுகள்

10. நாட்டை
11. பாதையில்
12. அக்கொடிக்கு
13. தன்னுடைய

## B4 முன்னுணர்வுக் கருத்தறிதல்

14. 7
15. 8
16. 1
17. 5

## C5 சுயவிடைக் கருத்தறிதல்

18. ரவியின் பெரியப்பா இரண்டு வாரக் கால மருத்துவ விடுப்பில் இருந்தார். அவரின் உடல் நலக்குறைவைப் பற்றி விசாரிக்க ரவியின் குடும்பத்தினர் அவன் பெரியப்பாவைக் காணச் சென்றனர்.

19. மார்பில் இடப்புறம் வலி ஏற்பட்ட அவருக்கு நடக்க முடியவில்லை. அவருக்கு மூச்சு விடுவதில் சிரமமும் நெஞ்சில் எரிச்சலும் ஏற்பட்டது. மேலும், உடல் முழுவதும் வியர்க்கத் தொடங்கியது. இதுவே ரவியின் பெரியப்பாவுக்குப் பயமும் நடுக்கமும் ஏற்படக் காரணம் ஆகும்.

20. 'எக்ஸ்-ரே' கதிர்கள் பொருள்களை ஊடுருவிச் செல்லும் தன்மை வாய்ந்தவை. அவை உடலின் உள்ளுறுப்புகளில் ஏற்படும் குறைப்பாடுகள், எலும்புகளின் முறிவு ஆகியவற்றைக் கண்டறிய உதவுகின்றன.

21. மருத்துவர் அவரின் நாடித் துடிப்பைப் பார்த்த பின் இரத்த அழுத்தத்தைச் சோதித்தார்.

22. நவீன மருத்துவத்தின் சாதனங்களின் மூலம் பல நோய்களுக்குத் தீர்வுக் கண்டு உயிர்களைக் காப்பாற்ற முடிகிறது. அவ்வாறு மருத்துவ வளர்ச்சி மக்களுக்குப் பயன்படுகிறது.

23. அவர் குறித்த நேரத்தில் மருத்துவமனைக்குச் சென்றிருக்காவிட்டால் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு மரணம் ஏற்பட்டிருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

24. பொருள் (4 மதிப்பெண்கள்)

அ. சோர்ந்தது

ஆ. அடைவதாக

***முற்றும்**